# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## எட்டாம் வகுப்பு

நேரம்: 2.30 மணி சமூகஅறிவியல் மதிப்பெண்கள்: 100

பகுதி - அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:-** 14×1=14

1) பாண்டிச்சேரி உடன்படிக்கையின்படி _____ கர்நாடகப்போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது
அ) முதல் ஆ) இரண்டாம் இ) மூன்றாம் ஈ) ஏதுமில்லை

2) சர் வில்லியம் ஹாக்கின்ஸ் _______ நாட்டைச் சேர்ந்தவர்
அ) போர்ச்சுகல் ஆ) ஸ்பெயின் இ) இங்கிலாந்து ஈ) பிரான்ஸ்

3) மகல்வாரி முறையில் "மகல்" என்றால் என்ன?
அ) வீடு ஆ) நிலம் இ) கிராமம் ஈ) அரண்மனை

4) நாளந்தாவை உலகப் பாரம்பரியச் சின்னமாக யுனஸ்கோ எந்த ஆண்டு அறிவித்தது?
அ) 2006 ஆ) 2007 இ) 2008 ஈ) 2009

5) புனித ஜார்ஜ் கோட்டை ஆங்கிலேயர்களால் கட்டப்பட்ட இடம்
அ) பம்பாய் ஆ) கடலூர் இ) மதராஸ் ஈ) கல்கத்தா

6) பருத்தி வளர ஏற்ற மண்
அ) செம்மண் ஆ) கரிசல் மண் இ) வண்டல் மண் ஈ) மலை மண்

7) புவி பெறும் ஆற்றல் _______
அ) நீரோட்டம் ஆ) மின்காந்த அலைகள் இ) அலைகள் ஈ) வெப்பம்

8) கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றையும், காரணத்தையும் ஆராய்க
கூற்று: நகரமயமாதல் முக்கியமாக கிராமப்புற மக்கள் நகர்ப்புறத்திற்கு இடம் பெயர்வதால் ஏற்படுவதாகும்
காரணம்: கிராமத்தில் இருந்து நகரத்திற்கு இடம்பெயர்தல் முதன்மையான ஒன்றல்ல
அ) கூற்று சரி, ஆனால் காரணம் தவறு ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு
இ) கூற்று மற்றும் காரணம் இரண்டு சரி ஈ) கூற்று தவறு மற்றும் காரணம் சரி

9) காற்றில் உள்ள நைட்ரஜன் சதவீதம்
அ) 78.09% ஆ) 74.08% இ) 80.07% ஈ) 76.63%

10) இரும்பு எஃகு மற்றும் சிமெண்ட் தொழிலகங்கள் _______ தொழிலகங்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்
அ) வேளாண் சார்ந்த ஆ) கனிமவளம் சார்ந்த
இ) வனப்பொருட்கள் சார்ந்த ஈ) கடல்வளம் சார்ந்த

11) உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஓய்வு பெறும் வயது
அ) 62 ஆ) 64 இ) 65 ஈ) 58

12) 1995 ஆம் ஆண்டில் உலகம் முழுவதிலும் இருந்து பெண்கள் _______ இல் கூடினர்.
அ) பெய்ஜிங் ஆ) நியூயார்க் இ) டெல்லி ஈ) எதுவுமில்லை

13) சாலை விபத்துக்களுக்கான காரணங்கள் யாவை?
அ) அதிவேகம் ஆ) குடிபோதையில் ஓட்டுத்தல்
இ) ஓட்டுநர்கள் கவனச்சிதறல் ஈ) இவை அனைத்தும்

14) இந்திய ரூபாய் குறியீட்டினை (₹) வடிவமைத்தவர் யார்?
அ) உதயகுமார் ஆ) அமர்த்தியா சென்
இ) அபிஜித் பானர்ஜி ஈ) இவற்றில் எவரும் இல்லை

பகுதி - ஆ

**II. எவையேனும் 10 வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி:- (28 கட்டாய வினா)** 10×2=20

15) இளவரசர் ஹென்றி "மாலுமி ஹென்றி" என ஏன் அழைக்கப்படுகிறார்?
16) துணைப் படைத்திட்டத்தில் கையெழுத்திட்ட நாடுகளின் பெயர்களை குறிப்பிடுக.
17) 1857ம் ஆண்டு புரட்சிக்கான உடனடிக் காரணம் என்ன?
18) நாளந்தா பல்கலைக்கழகம் பற்றி உங்களுக்கு தெரிவது யாது?
19) செல்வச் சுரண்டல் கோட்பாடு பற்றி எழுதுக.
20) மண்ணின் வகைகளைக் கூறுக.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



21) நீர்சுழற்சி வரையறு
22) வறட்சியின் வகைகளைக் குறிப்பிடுக.
23) தொழிலக அமைவிடத்திற்கு காரணமான காரணிகளைக் குறிப்பிடுக
24) ஆப்பிரிக்காவின் முக்கியமான ஆறுகள் யாவை?
25) முதலமைச்சர் எவ்வாறு நியமிக்கப்படுகிறார்?
26) நற்குடிமகனின் மூன்று பண்புகளை குறிப்பிடுக.
27) மனித உரிமைகள் என்றால் என்ன?
28) கருப்பு பணம் என்பதன் பொருள் என்ன?

பகுதி - இ

**III. எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விரிவான விடையளி.**
**(கேள்வி எண். 42 கட்டாயமாக விடையளிக்கவும்)** **10×5=50**

29) கோடிட்ட இடங்களை நிரப்புக
i) _________ சிவகங்கையின் சிங்கம் என அழைக்கப்படுகிறார்
ii) தொழிற்புரட்சி நடைபெற்ற இடம் _________
iii) நீர் சுழற்சியில் _________ நிலைகள் உள்ளன
iv) இந்திய அரசியலமைப்புச் சட்டம் _________ குடியுரிமையை மட்டும் வழங்குகிறது
v) இந்திய ரிசர்வ் வங்கி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு _________
30) பிரிட்டிஷ் ஆட்சியை விரிவுபடுத்த டல்ஹௌசி பிரபு கொண்டு வந்த கொள்கையை பற்றி விவரி?
31) 1857 ஆம் ஆண்டு புரட்சியின் தோல்விக்கான காரணங்களை எழுதுக.
32) தோட்டத் தொழில்கள் பற்றி விரிவாக எழுதுக.
33) மண்ணினை வகைப்படுத்தி விவரிக்கவும்.
34) நகரமயமாக்கலினால் ஏற்படும் சவால்களை ஆராய்க
35) நீர் மாசுபாட்டால் ஏற்படும் விளைவுகள் குறித்து விரிவாக விவாதிக்க
36) வேறுபடுத்துக. i) காலநிலை மற்றும் வானிலை ii) இடர் மற்றும் பேரிடர்
காரணம் கூறுக:- உயரம் அதிகரிக்கும் பொழுது வெப்பம் குறைகிறது.
37) **பொருத்துக**

| | | |
|---|---|---|
| i) ஆங்கிலேயர் | - | லட்சுமிபாய் |
| ii) ஜான்சி | - | 1600 |
| iii) நிலக்கரி | - | வரி ஏமாற்றுபவர்கள் |
| iv) சட்டப்பேரவை | - | ஆந்த்ரசைட் |
| v) கருப்புபணம் | - | கீழவை |

38) **சரியா? தவறா எனக் குறிப்பிடுக.**
i) ஆனந்தரங்கம் பிரிட்டிஷ் மொழிப்பெயர்ப்பாளராக இருந்தார்.
ii) நாலடியார் சமணர் வழங்கிய நூலாகும்
iii) ஈரப்பதத்தை கணக்கிடும் கருவி அரனிராய்டு அழுத்தமானி
iv) இந்திய நாட்டிற்கென ஒரு சமயம் உள்ளது
v) அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஒற்றைக் குடியுரிமையை வழங்குகிறது
39) முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி?
40) சாலை விபத்துக்களுக்கான காரணங்களை விவரி?
41) பொருளாதாரத்தில் கருப்பு பணத்தின் விளைவுகள் யாவை?
42) கொடுக்கப்பட்டுள்ள இந்திய ஆறுகள் வரைபடத்தில் கீழ்காணும் இடங்களைக் குறிக்கவும்:
i) கள்ளிக்கோட்டை ii) கல்கத்தா iii) பிளாசி iv) நாளந்தா v) டெல்லி

பகுதி - ஈ **2×8=16**

**IV. கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்:-**
43) அ) நவீன இந்தியாவின் வரலாற்று ஆதாரங்கள் பற்றி குறிப்பிடுக? **(அல்லது)**
ஆ) நிலையான நிலவரி திட்டத்தின் நிறைகுறைகளை விவரி?
44) **கொடுக்கப்பட்டுள்ள உலக வரைபடத்தில் கீழ்காணும் இடங்களை குறிக்கவும்:-**
i) டோக்கியோ ii) புதுதில்லி iii) மெக்சிகோ நகரம் iv) பாரிஸ்
v) இலண்டன் vi) ஆப்பிரிக்கா vii) ஆசியா viii) வடஅமெரிக்கா

********

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com